RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
# MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 188 | ஜூலை.11 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## செய்தியாளர்கள் தாக்கப்பட்டால் மாபெரும் போராட்டம் மாலைதந்தி நாளிதழ், மத்திய மாநில சங்கங்கள் கண்டிப்பு

விருதுநகர், ஜூலை.11-

விருதுநகர் மாவட்டம் மதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் செய்தி சேகரிக்க சென்ற செய்தியாளர்களை கொடூரமான முறையில் கொலை வெறி தாக்குதல் நடத்திய கட்சி நிர்வாகிகளை சிவகங்கை மாவட்ட பத்திரிகையாளர் நலச் சங்கம் மற்றும் மாலை தந்தி நாளிதழின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம் மேலும் தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பத்திரிக்கையாளர் சங்கம் சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம் இதுபோல் செய்தியாளர்கள் தாக்கப்பட்டால் மத்திய மாநில சங்கங்கள் ஒன்று சேர்ந்து மாபெரும் போராட்டம் நடைபெறும் என்பதையும் பத்திரிகையாளர்களுக்கு பணி பாதுகாப்பு சட்டம் நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது


SIVAGANGAI DISTRICT JOURNALIST WELFARE ASSOCIATION
சிவகங்கை மாவட்ட பத்திரிக்கையாளர்கள் நல சங்கம்
Reg.No:SRG/59/2021

**விருதுநகர் மாவட்டத்தில்செய்தியாளர்கள் தாக்கப்பட்டது குறித்து மாபெரும் கண்டன அறிவிப்பு**

விருதுநகர் மாவட்டமதிமுக விழாவில் செய்தி சேகரிக்க சென்ற செய்தியாளர்களை கொடூரமான கொலை வெறி தாக்குதல் நடத்திய கட்சி நிர்வாகிகளை வன்மையாக கண்டிக்கிறோம் இதுபோல் தவறுகள் எங்கும் நடக்க வண்ணம் அவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் வழக்கு பதிய வேண்டும் என்றும் சிவகங்கை மாவட்ட பத்திரிக்கையாளர்கள் நலச்சங்கம் வாயிலாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்மேலும் இது போல் செய்தியாளர்கள் தாக்கப்பட்டால் மத்திய மாநில சங்கங்கள் ஒன்று சேர்ந்து மாபெரும் போராட்டம் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்பத்திரிக்கையாளர்களுக்கு பணி பாதுகாப்பு சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்

தேதி: 10 - 07 - 25

இப்படிக்கு
தலைவர்
ஆ.பொன்ராஜ்

No.6A, Madurai Road, Sivagangai - 630 561 | Email: svgdiwa@gmail.com






## அரசு கல்லூரியில் போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் துவக்கம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடையநல்லூர் நாட்டு நலப்பணி திட்டம் அணி 007 தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு வழிகாட்டு மையத்துடன் இணைந்து 9.7.25 போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு 20252026 இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகள் துவக்க விழா மற்றும் ஆலோசனை கருத்தரங்கு முதல்வர் ஜெயா தலைமையில் நடைபெற்றது. இதில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக போட்டித் தேர்வுக்கான பயிற்சி கையேடுகள் இலவசமாக வழங்கப்பட்டன. இதில் திரளான மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர் இதற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பால் மகேஷ் மற்றும் பயிற்சி வகுப்பு பொறுப்பு பேராசிரியர் ஆறுமுகம் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## திருவண்ணாமலை மாநகராட்சியை கண்டித்து ஜூலை 16ல் அதிமுக ஆர்ப்பாட்டம்

சென்னை: ஜூலை.11-

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், "திருவண்ணாமலை மாநகரில் அறநிலையத் துறை, மாநகராட்சி நிர்வாகம், மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசுத் துறைகளின் அலட்சியத்தாலும், ஆமைவேகப் பணிகளினாலும் பக்தர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திண்டாடுகின்றனர்.

பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு முறையான வழிமுறைகளைக் கையாளாததால் அண்ணாமலையார் கோயிலுக்கு நாள்தோறும் வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பலமணி நேரம் காத்துக்கிடக்கும் அவலம் நிலவுகிறது. குறைந்தது 4 மணி நேரத்துக்கும் மேலாக வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வசதி ஏற்பாடு செய்யவில்லை.

பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு முறையான வசதிகள் செய்து தரப்படவில்லை. இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றன. ஆமை வேகத்தில் மாட வீதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைப்பதால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மாட வீதிக்கு வாகனங்கள் வரத் தடை இருக்கின்ற காரணத்தால் வியாபாரிகள் மற்றும் நடைபாதை வியாபாரிகள் கடும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

15 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே குடிநீர் வழங்கப்படுவதால் கடுமையான குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. மோசமான சாலைகள், சாலைகளில் கழிவுநீர் மற்றும் குப்பைகள் தேங்கியுள்ளதால் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அவதிக்குள்ளாகின்றனர். திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள 18 கிராமங்களில் எந்தஒரு அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில், அதை மாநகராட்சியுடன் இணைத்து ஏழை, எளிய மக்களிடமிருந்து கூடுதல் வரிகளை மட்டுமே வசூலிக்கின்றனர்.

இந்நிலையில், அண்ணாமலையார் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தராத அறநிலையத் துறையைக் கண்டித்தும், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யாத மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும், ஆமை வேகத்தில் பணிகளை மேற்கொண்டு வரும் அரசுத் துறையினரைக் கண்டித்தும், இவற்றை வேடிக்கை பார்க்கும் திமுக அரசை கண்டித்தும் திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் வரும் 16ம் தேதி காலை 10 மணிக்கு, திருவண்ணாமலை மாநகராட்சி, அண்ணா சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டம் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி தலைமையிலும், முன்னாள் அமைச்சர் எஸ்.ராமச்சந்திரன் முன்னிலையிலும் நடைபெறும்" என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பிரேசில், நமீபியா உட்பட 27 நாடுகளின் உயரிய விருதுகளைப் பெற்ற பிரதமர் மோடி

புதுடெல்லி: ஜூலை.11-

பிரேசில், கானா, நமீபியா உட்பட 27 நாடுகளின் உயரிய விருதுகளைப் பெற்றிருப்பதன் மூலம் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்த்திருக்கிறார் .

"பிரதமர் நரேந்திர மோடி 5 நாடுகள் சுற்றுப் பயணத்தின்போது பிரேசில், கானா, நமீபியா ஆகிய நாடுகளின் மிக உயர்ந்த சிவில் விருதுகளைப் பெற்றுள்ளார். இதன் மூலம், இதுவரை 27 உலக நாடுகளின் மிக உயரிய சிவில் விருதுகளைப் பிரதமர் மோடி பெற்றுள்ளார்.



கடந்த 2014ம் ஆண்டு நாட்டின் பிரதமராக பொறுப்பேற்ற நரேந்திர மோடி, உலகின் பெரிய மற்றும் சிறிய நாடுகளுடன் வலுவான ராஜதந்திர உறவுகளை வளர்த்து வருவதன் மூலம், இந்தியாவின் உலகளாவிய நிலையை மாற்றியுள்ளார்.

பிரமதர் நரேந்திர மோடியின் தொலைநோக்குத் தலைமை உலகின் 4வது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மாற்றி உள்ளது. அதோடு, ஆபரேஷன் சிந்தூர் போன்ற முக்கிய தருணங்களில் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் மரியாதையையும் நாடு பெற்றது.

தனது அரிய சாதனைகள் மூலம் பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்க்கிறார். மிக உயர்ந்த தலைமைப் பண்பு மற்றும் ராஜதந்திர திறன்கள் மூமல் ஒரு முன்மாதிரியான அரசியல் தலைவராக பிரதமர் மோடி திகழ்கிறார்."

பாஜக தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பிரதமர் நரேந்திர மோடி 27 சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளார். தற்போது நமீபியாவின் மிக உயர்ந்த சிவில் விருதான தி ஆர்டர் ஆஃப் தி மோஸ்ட் ஏன்சியன்ட் வெல்விட்சியா மிராபிலிஸ் விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இபிஎஸ் 'டம்மி வாய்ஸ்' ஆக இருக்க வேண்டிய அவசியம் இல்லை: ஸ்டாலினுக்கு நயினார் நாகேந்திரன் பதிலடி

மதுரை: ஜூலை.11-

"கூட்டணியில் இருக்கிறோம். 'டம்மி வாய்ஸ்' ஆக இருக்க வேண்டிய அவசியம் இல்லை" என முதல்வர் ஸ்டாலினுக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பதில் அளித்துள்ளார்.





விருதுநகர் செல்வதற்காக பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் இன்று சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வந்தார். அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியது: "பாஸ்டாக்குக்கு தமிழக போக்குவரத்து கழகம் பாக்கி வைத்துள்ளது. டீசல், பெட்ரோல் போடுவதிலேயே கோடிக்கணக்கான ரூபாய் பாக்கி வைத்துள்ளனர். அரசு போக்குவரத்து மானியம் கொடுத்து, அதை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். முதல்வர் செய்யவேண்டிய வேலையை செய்யாததால் போக்குவரத்துக் கழகம் பாதிக்கப்படுகிறது.

தமிழ்நாடு இங்கேதான் இருக்கிறது. எதற்கு ஓரணியில் பயணம் செய்யவேண்டும். எப்போது அதிமுக பாஜக கூட்டணி அமைந்ததோ, அப்போது இருந்தே முதல்வருக்கு ஜுரம் வந்துவிட்டது. தோல்வி பயமும் வந்துள்ளது. கூட்டணி கட்சித் தலைவர்களும் அதே மாதிரி பேசுகிறார்கள்.

அம்பாசமுத்திரத்தில் 17 வயது சிறுமியை போதை பழக்கமுடையவர் பாலியல் வன்கொடுமை செய்திருக்கிறார். வள்ளியூரில் 17 பவுன் நகைக்காக மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். தினசரி இதுபோன்ற சட்டம் ஒழுங்கு பிரச்சினை, போதைப் பொருள் நடமாட்டம் அதிகரிக்கிறது. இதை மறைக்க முதல்வர் ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் ஊர், ஊராக செல்கிறார். இதில் எந்த நன்மையும் இல்லை.

இன்றைக்கு மக்கள் விரோத ஆட்சியாக திமுக உள்ளது. நிச்சயமாக 2026 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். பாஜகவின் 'டம்மி வாய்ஸ்' தான் எடப்பாடி பழனிசாமி என முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். அவருக்கு இப்போது என்ன பேசுவது என்றே தெரியவில்லை. முன்னாள் முதல்வர் பழனிசாமி பேசவேண்டிய கருத்தைதான் பேசியிருக்கிறார். கூட்டணியில் நாங்கள் இருக்கிறோம். டம்மி வாய்ஸாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அண்ணன் வைகோ எப்போதும் அதிகம் கோபப்படக் கூடியவர். கூட்டத்தில் இருக்கும்போது சத்தம் போடுவதை எல்லா இடங்களிலும் செய்கிறார். சாத்தூர் கூட்டத்தில் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டு இருக்கின்றனர். உண்மையில் அது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது.

முருக பக்தர்கள் மாநாட்டை அமைச்சர் சேகர்பாபு சங்கிகள் கூட்டம் என்கிறார். முருகர் மாநாடு நடப்பதற்கு முன்பாகவே 6 நாட்களில் மட்டும் இரண்டரை லட்சம் பேர் வந்திருந்தனர். ஆறாவது நாள் 5 லட்சம் பேர் வந்தனர். அவர்கள் கட்சிக் கூட்டம் நடத்தினால் டாஸ்மாக்கில் தான் அதிக கூட்டம் இருக்கும். ஆனால், இக்கூட்டத்துக்கு வந்தவர்கள் கூட்டம் முடிந்தவுடன் அமைதியாக அமர்ந்திருந்த சேரை எடுத்து அடுக்கி வைத்து விட்டு, கீழே கிடந்த பாட்டிலை சுத்தம் செய்து விட்டு சென்றனர். இதுவே உண்மையான முருக பக்தர்கள் மாநாடு" என்றார்.

மதுரை மாநகராட்சி ஊழல் குறித்த கேள்விக்கு பாஜக மாநில செயலாளர் ராம. ஸ்ரீனிவாசன் பதிலளிக்கும்போது, "இந்த மாநகராட்சி மேயரை மாற்றுவார்கள் என யூகம் உள்ளது. நாளை மறுநாள் பாஜக சார்பில் 3 மாவட்டங்கள் இணைந்து ஆர்ப்பாட்டம் நடக்கிறது. திமுக பதவி விலக வலியுறுத்துவோம்" என்றார்.

## "அதிமுக ஆட்சி நீடித்திருந்தால் இந்தி பேசும் நிலை உருவாகி இருக்கும்!" உதயநிதி ஸ்டாலின்

நாமக்கல்: ஜூலை.11-

"தமிழகத்தில் ஒருவேளை அதிமுக ஆட்சியில் இருந்திருந்தால் நம்மில் பாதி பேர் இந்தியில் பேசிக் கொண்டிருப்போம்" என உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




நாமக்கல்லில் திமுக சார்பு அணி நிர்வாகிகளுடான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றுப் பேசியது: "கட்சியைப் பொறுத்தவரை சார்பணிக்கு தனி இடம் உண்டு. கட்சித் தலைவர் அறிவுறுத்தல்படி சார்பணியினரை சந்தித்து வருகிறேன். கட்சியை சார்ந்து சார்பணி இல்லை. சார்பணியை கட்சி சார்ந்திருக்கும் சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். 23 சார்பணி 25 சார்பணியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே மாற்றுத்திறனாளிகள் அணி, கல்வியாளர்கள் அணியும் திமுகவில் மட்டும் தான் உள்ளது. சார்பணியினர் நினைத்தால் சாதனை படைக்கும் அணியாக மாறலாம். இந்தி எதிர்ப்பு போராட்டத்தை கட்சியின் மாணவரணி தவிர்த்து பேச இயலாது. சார்பணியினர் தனிப்பட்ட முறையில் 200 வாக்குகளை வைத்திருந்தீர்கள் என்றால் உங்களை யாராலும் தவிர்க்க இயலாது.

அரசின் திட்டங்களை தெருமுனைப் பிரச்சாரம் மூலம் மக்களிடம் கொண்டு சேருங்கள். திண்ணைப் பிரச்சாரம் செய்யுங்கள். சமூக வலைதளங்களிலும் அரசின் திட்டங்களை கொண்டு சேர்ப்பதில் சிறப்பாக செயல்படுங்கள். மக்களின் பிரச்சினைகளை காது கொடுத்து கேளுங்கள். நிர்வாகிகளுக்குள் சிறு சிறு பிரச்சினைகள் இருக்கலாம். அதை தவிர்த்து 2026ம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை மனதில் வைத்து செயல்படுங்கள். புதிய வாக்காளர்களை கட்சியின் ஆதரவாளர்களாக மாற்றும் வகையில் செயல்படுங்கள்.

அதிமுகவும், பாஜகவும் கூட்டணி அமைத்துள்ளனர். அதனால் நம் பணி எளிதாகிவிட்டது என நினைக்கக் கூடாது. திமுக தலைமையிலான ஆட்சிக்கு பல முனைகளில் மத்திய பாஜக அரசு இடையூறு செய்து வருகிறது. புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியை கொண்டு வர முயற்சி செய்கின்றனர். நல்லவேளை திமுக தலைமையிலான அரசு இங்கு உள்ளது. ஒருவேளை அதிமுக ஆட்சியில் இருந்திருந்தால் நாமெல்லாம் பாதி பேர் இந்தியில் பேசிக் கொண்டிருப்போம். அந்த நிலைமையை எடப்பாடி பழனிசாமி உருவாக்கியிருப்பார். அவரே டெல்லி சென்று புதிய கல்விக் கொள்கையை ஏற்பதாக கையெழுத்து போட்டு கொடுத்திருப்பார். இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் மத்திய அரசு திணிக்க முயற்சிக்கின்றனர்.

தொகுதி மறுவரை செய்தால் தமிழகத்தில் உள்ள 39 மக்களவைத் தொகுதி எண்ணிக்கை 31 ஆக குறையும். 8 தொகுதிகளை இழக்க நேரிடும். சிறப்பாக செயல்பட்டால் சார்பணிக்கான முக்கியத்துவத்தை தலைவர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பேன்" என்றார். அமைச்சர்கள் மதிவேந்தன், ராஜேந்திரன், நாமக்கல் கிழக்கு, மேற்கு மவட்ட திமுக செயலாளர்கள், சார்பு அணியின் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# பிரேசில், நமீபியா உட்பட 27 நாடுகளின் உயரிய விருதுகளைப் பெற்ற பிரதமர் மோடி: பவன் கல்யாண் வாழ்த்து

புதுடெல்லி, ஜூலை.11-

பிரேசில், கானா, நமீபியா உட்பட 27 நாடுகளின் உயரிய விருதுகளைப் பெற்றிருப்பதன் மூலம் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்த்திருக்கிறார் என்று ஆந்திரப் பிரதேச துணை முதல்வரும் ஜனசேனா கட்சித் தலைவருமான பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பவன் கல்யாண் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பிரதமர் நரேந்திர மோடி 5 நாடுகள் சுற்றுப் பயணத்தின்போது பிரேசில், கானா, நமீபியா ஆகிய நாடுகளின் மிக உயர்ந்த சிவில் விருதுகளைப் பெற்றுள்ளார். இதன் மூலம், இதுவரை 27 உலக நாடுகளின் மிக உயரிய சிவில் விருதுகளைப் பிரதமர் மோடி பெற்றுள்ளார்.

கடந்த 2014ம் ஆண்டு நாட்டின் பிரதமராக பொறுப்பேற்ற நரேந்திர மோடி, உலகின் பெரிய மற்றும் சிறிய நாடுகளுடன் வலுவான ராஜதந்திர உறவுகளை வளர்த்து வருவதன் மூலம், இந்தியாவின் உலகளாவிய நிலையை மாற்றியுள்ளார்.

பிரமதர் நரேந்திர மோடியின் தொலை நோக்குத் தலைமை உலகின் 4வது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மாற்றி உள்ளது. அதோடு, ஆபரேஷன் சிந்தூர் போன்ற முக்கிய தருணங்களில் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் மரியாதையையும் நாடு பெற்றது.

தனது அரிய சாதனைகள் மூலம் பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்க்கிறார். மிக உயர்ந்த தலைமைப் பண்பு மற்றும் ராஜதந்திர திறன்கள் மூமல் ஒரு முன்மாதிரியான அரசியல் தலைவராக பிரதமர் மோடி திகழ்கிறார்." என பாராட்டு தெரிவித்துள்ளார்.

பாஜக தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பிரதமர் நரேந்திர மோடி 27 சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளார். தற்போது நமீபியாவின் மிக உயர்ந்த சிவில் விருதான தி ஆர்டர் ஆஃப் தி மோஸ்ட் ஏன்சியன்ட் வெல்விட்சியா மிராபிலிஸ் விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது பிரதமருக்கு மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களுக்கும் பெருமை சேர்க்கும் தருணம். உலக அரங்கில் இந்தியாவின் வளர்ந்து வரும் அந்தஸ்து மற்றும் மரியாதைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாக்கு தோட்டத்திற்குள் புகுந்து உணவு தேடிய காட்டு யானை: கிராம மக்கள் அச்சம்

கோவை, ஜூலை.11-

கோவை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைகளை ஒட்டிய வனப்பகுதியில் காட்டு யானை உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. வனப்பகுதியில் இருந்து வெளியே வரும் காட்டு யானைகள் அடிக்கடி உணவு மற்றும் தண்ணீர் தேடி வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களுக்குள் நுழைந்து விடுகின்றன. இதனிடையே கடந்த சில நாட்களாக கெம்பனூர் ஓணாப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஒற்றை ஆண் காட்டு யானை குடியிருப்பு பகுதிகள் நிறைந்த பகுதிகளில் இரவு நேரங்களில்



தனியாக சுற்றித்திரிந்து வருகிறது.இந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு வனப்பகுதியில் இருந்து வெளியேறிய அந்த ஆண் காட்டு யானை ஓணாப்பாளையம் கிராமத்திற்குள் புகுந்தது. அப்பகுதியில் உள்ள ஒரு விவசாய தோட்டத்திற்குள் நுழைந்த அந்த யானை உணவு தேடி சுற்றியது. இந்த காட்சிகள் அப்பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் வனத்துறையினர் அங்கு சென்று காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்டியடித்தனர். தோட்டத்து வீடுகளில் ஆட்கள் வசித்து வரும் நிலையில் காட்டு யானை அடிக்கடி நுழைந்து விளைபொருட்களையும் ரேசன் அரிசி கால்நடை தீவனங்கள் உள்ளிட்ட பொருட்களை சாப்பிட்டு வருவது அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கிராமங்களுக்குள் காட்டு யானைகள் நுழைவதை தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


# 25,000 தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மூடப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்க வேண்டும்

## தூத்துக்குடி மக்கள் வாழ்வாதார நல சங்க தலைவர் தியாகராஜன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை மனு

தூத்துக்குடி, ஜூலை.11-

தூத்துக்குடி மற்றும் அதை சுற்றியுள்ள 25.000 த்துக்கும் மேற்பட்ட தொழிலா ளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மூடப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் தமிழ்நாடு அரசுதிறக்க உத்தரவிட வேண்டும் என்று தூத்துக்குடி மக்கள் வாழ்வாதார இயக்க நல சங்க தலைவர் தியாகராஜன், தலைமையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத்திடம் கோரிக்கை மனு கொடுத்தனர்,

தற்போதுஸ்டெர்லைட் ஆலையை பசுமை முறையில் மீண்டும் துவங்களாம் என்ற நிபுணர் குழுவின் பரிந்து ரையை நாங்கள் நாளிதழ்களில் பார்த்து தூத்துக்குடி மக்கள் வாழ்வ ாதார இயக்க சங்கத்தின் சார்பில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம் மேற்படி அறிக்கை கொடுத்த குழுவில் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான பர்யாவரண பூஷன் விருது பெற்ற பேராசிரியர்





பத்மபூஷன் டாக்டர் கணபதி யாதவ், மற்றும் ஓய்வு பெற்ற சுற்றுச்சூழல் பேராசிரியர் டாக்டர் நாகேந்திரன், ஆகியோர் கொடுத்த அறிக்கையை நாங்கள் மனமுவந்து வரவேற்கிறோம்,

மேற்கண்ட அறிஞர்களின் அறிக்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டு வேலை இழந்திருக்கும் 25000 தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்க வேண்டும், செம்பு காப்பர் உற்பத்தி என்பது நாட்டின் முக்கிய மூலப் பொருளாகும் தற்போதைய காலகட்டத்தில் காப்பர் உற்பத்தி அதிக அளவில் தேவைப்படுவதால் தற்போது குஜராத், ஒடிசா, போன்ற மாநிலங்களில் தான் மேற்படி தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன, ஏற்கனவே தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் இயங்கி வந்த செம்பு ஒருக்காலை மூடப்பட்டுள்ளதை மீண்டும் தமிழ்நாடு அரசு திறக்க வேண்டும், அதன் மூலம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் செம்பு காப்பர் ஊருக்குஆலை மூலம் உற்பத்தி செய்யப்படும்செம்பு உற்பத்தி மூலம் செம்பு உற்ப்பத்திதேவையை அரசு நிவர்த்தி செய்ய முடியும்,,

ஆகவே தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும்திறக்க வேண்டும் என்று தூத்துக்குடி மக்கள் வாழ்வாதார இயக்க சங்கத் தலைவர் தியாகராஜன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சி தலைவர் இளம் பகவத்திடம் கோரிக்கை மனு கொடுத்தனர், இந்நிகழ்ச்சியில் சோமசுந்தரம், உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# சுகாதார பணியாளர் உதவி மையம்: சென்னை மாநகராட்சி டெண்டர் வெளியீடு

சென்னை, ஜூலை.11-

சென்னை மாநகராட்சிஅதன் 200 பிரிவு அலுவலகங்களில் சுகாதாரப் பணியாளர்களின் நலனுக்காக உதவி மையங்கள் அமைக்க ரூ.60.70 லட்சம் செலவிட உள்ளது.

இந்த மையங்களில் இணைய வசதியுடன் கூடிய 200 டெஸ்க்டாப் கணினிகள் மற்றும் 200 பிரிண்டர்களை மூன்று மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு தகுதியான நிறுவனத்தைத் தேர்வு செய்ய மாநகராட்சி டெண்டர் வெளியிட்டுள்ளது. "டெஸ்க்டாப் கணினிகள், லேப்டாப்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்களை வழங்குவதில் அனுபவம் உள்ள நிறுவனங்கள் இந்த டெண்டரில் பங்கேற்கலாம். இம்மாத இறுதிக்குள் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கணினிகள் மற்றும் பிற வசதிகளை நிறுவும் பணி தொடங்கப்படவுள்ளது.

இந்த உதவி மையங்கள், மாநகராட்சியின் நிரந்தர ஊழியர்கள், 17,600க்கும் மேற்பட்ட தற்காலிகப் பணியாளர்கள், தனியார் முகமைகள் மூலம் பணியமர்த்தப்பட்டவர்கள் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் போன்ற திட்டங்களில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களுக்கு உதவும். மாநில அரசு வழங்கும் நலத்திட்டங்களைப் பெறுவதற்கு இந்த மையங்கள் உதவி புரியும்.

விபத்து காப்பீடு, இறப்பு மற்றும் இறுதிச் சடங்கு உதவி, ஓய்வூதியம், மகப்பேறு பயன்கள் போன்றவற்றைப் பெறுவதற்கும் இந்த மையங்கள் உதவும்,சென்னை மாநகராட்சியின் இந்த முயற்சி, சுகாதாரப் பணியாளர்களின் நலனை மேம்படுத்துவதற்கு முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# ஆனி மாத பவுர்ணமியையொட்டி தி.மலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்: அண்ணாமலையாரை தரிசிக்க 6 மணி நேரம் காத்திருப்பு

திருவண்ணாமலை, ஜூலை.11-

ஆனி மாத பவுர்ணமியான இன்று காலை முதல் திருவண்ணாமலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். அண்ணாமலையார் கோயிலில் கூட்டம் அலைமோதுவதால் சுவாமி தரிசனம் செய்ய சுமார் 6 மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் மாதந்தோறும் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்று அண்ணாமலையாரை தரிசனம் செய்து வருகின்றனர். அதன்படி ஆனி மாத பவுர்ணமி இன்று அதிகாலை 2.33 மணிக்கு தொடங்கி, நாளை அதிகாலை 3.08 மணிக்கு நிறைவடைகிறது. எனவே, இந்த நேரத்தில் கிரிவலம் செல்ல உகந்தது என கோயில் நிர்வாகம் அறிவித்திருந்தது.

அதன்படி இன்று அதிகாலை கோயில் நடை திறக்கப்பட்டு அண்ணாமலையார், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். நடை திறக்கும் முன்பே பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இன்று அதிகாலை முதல் இரவு 10 மணி வரை நடை அடைப்பு இல்லாமல் பக்தர்கள் தொடர்ச்சியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட உள்ளனர்.

இலவச தரிசன வரிசையில் ராஜகோபுரத்தை கடந்தும், கட்டண தரிசன வரிசையில் அம்மணியம்மன் கோபுரத்தை கடந்தும் மாடவீதி வரை நீண்ட வரிசையில் பக்தர்கள் காத்திருந்தனர். சுட்டெரித்த வெயிலையும் பொருட்படுத்தாமல், சுமார் 6 மணி நேரத்துக்கும் மேலாக வரிசையில் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

அதேபோல் காலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். தொடர்ந்து கிரிவலம் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் அதிகரித்தது. மேலும் தமிழகத்தின் முக்கிய நகரங்கள் மற்றும் கர்நாடகா, ஆந்திராவில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது. நகரின் முக்கிய சாலை சந்திப்புகளில் தற்காலிக பஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் இருந்து காட்பாடி, விழுப்புரம் வழியாக திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்களும் இயக்கப் படுகிறது. மேலும் பவுர்ணமி முன்னிட்டு ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு ள்ளனர். பல்வேறு இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

# மைசூரு மருத்துவமனைகளில் இதயப் பரிசோதனைக்காக குவியும் மக்கள் பின்னணி என்ன?

மைசூரு, ஜூலை.11-

கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹாசன் மாவட்டத்தில் கடந்த 40 நாட்களில் 45 வயதுக்குட்பட்ட 23 பேர் மாரடைப்பு காரணமாக திடீரென உயிரிழந்தனர். இதனால் பீதியடைந்த மக்கள் மைசூருவில் உள்ள பிரபல ஜெயதேவா மருத்துவமனையில் இதயப் பரிசோதனை செய்துகொள்வதற்காக குவிகின்றனர். அதிகாலை தொடங்கி இரவு வரை காத்திருந்து இதய செயல்பாடு குறித்த பரிசோதனைகளை செய்து கொண்டு செல்கின்றனர். மருத்துவமனையில் மக்கள் கூட்டம் நிரம்பிவழியும் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. மருத்துவமனை தரப்பும், ஹாசன் மாவட்டத்தில் 45 வயதுக்குட்பட்ட 23 பேர் மாரடைப்பு காரணமாக திடீரென உயிரிழந்த செய்திகள் பரவிய பின்னரே இந்த அளவுக்குக் கூட்டம் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மருத்துவ கண்காணிப்பாளரின் அறிவுரை: இது குறித்து மைசூரு ஜெயதேவா மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்ட கேஎஸ் சதானந்த் கூறுகையில், "ஊடக செய்திகளைப் பார்த்து விட்டு மக்கள் கூட்டம் அலைமோது கிறது. ஜெயதேவா மருத்துவமனையில் இதயப் பரிசோதனை செய்து கொள்வது மட்டுமே பிரச்சினையைத் தீர்த்து விடாது. மேலும், மக்கள் இந்த மருத்துவமனையை மட்டுமே நாடுவதை விடுத்து, அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கும் செல்லலாம்.



இதயப் பரிசோதனை செய்து கொள்வது மட்டும் எதிர்காலத்தில் இதய நோய் ஏற்படுவதைத் தடுத்து விடாது. மக்கள் தங்களின் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும். உடற்பயிற்சி, ஆரோக்கியமான வாழ்க்கை முறை அவசியம். அதைவிடுத்து அனைவரும் இங்கே குவிந்தால், ஏற்கெனவே உள்நோயாளிகளாக இருக்கும் இதயக் கோளாறு உள்ளவர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை வழங்க இயலாமல் போய்விடும். வதந்திகளை நம்ப வேண்டாம்." என்றார்.

பின்னணி என்ன? கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹாசன் மாவட்டத்தில் கடந்த 40 நாட்களில் 45 வயதுக்குட்பட்ட 23 பேர் மாரடைப்பு காரணமாக திடீரென உயிரிழந்தனர். இவர்களில் 6 பேர் 19 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்கள். இதே போல கதக் மாவட்டத்திலும் 20க்கும் மேற்பட்டோர் திடீர் மாரடைப்பால் உயிரிழந்தனர். இந்நிலையில், மைசூரு ஜெயதேவா மருத்துவமனையிலும், அதன் பெங்களூரு கிளையிலும் இதயப் பரிசோதனைக்காக வருவோரின் எண்ணிக்கை சமீப நாட்களில் 8% அதிகரித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் ஹாசன் மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்க்ளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பு: இதற்கிடையில் திடீர் மரணங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக கர்நாடக அரசு 10 மருத்துவர்கள் அடங்கிய நிபுணர் குழுவை அமைத்தது. மருத்துவ நிபுணர் குழு சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவிடம் ஆய்வறிக்கையை சமர்ப்பித்தது.

அதனை பெற்றுக் கொண்ட பின்னர், தினேஷ் குண்டு ராவ் கூறியதாவது: கரோனா தொற்று பரவலுக்கு பிறகு மாரடைப்புகள் சற்று உயர்ந்துள்ளதை அறிக்கை உறுதி செய்துள்ளது. அதேவேளையில் கரோனா தடுப்பூசியால் இந்த பாதிப்பு ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கரோனா தொற்றுக்கு ஆளான நபர்களுக்கு நீரிழிவு, ரத்த அழுத்த நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. திடீர் மாரடைப்புக்கு இதுவும் ஒரு காரணம் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

இளம்வயது மாரடைப்பு மரணங்களை தடுக்க மருத்துவமனை தவிர பிற இடங்களில் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தால் கட்டாயம் பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும். அப்போது தான் உயிரிழப்புக்கு சரியான காரணம் என்ன என்பது தெரியவரும். இவ்வாறு தினேஷ் குண்டுராவ் தெரிவித்தார்.

# தமிழகத்தில் முதுகலை ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்ப தேர்வு: ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை, ஜூலை.11-

தமிழகத்தில் காலியாக உள்ள 1,996 முதுகலை பட்டதாரி ஆசிரியர் காலி பணி இடங்களுக்கு இன்று முதல் வரும் ஆகஸ்ட் 12ம் தேதி வரை விண்ணப்பிக்க ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; முதுகலை ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் நிலை 1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை 1 ஆகிய பணியிடங்களுக்கான அறிவிக்கை எண்.02 / 2025. ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளம் Website: https://www.trb.tn.gov.in வாயிலாக இன்று (10.07.2025) வெளியிடப்படுகிறது. பாடவாரியான காலிப் பணியிட விவரங்கள் கல்வித் தகுதி, வயது மற்றும் விண்ணப்பம் செய்வதற்கான அனைத்து விவரங்களும் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விண்ணப்பதாரர்கள் இணையதளம் வாயிலாக (Online Application) விண்ணப்பிக்க ஏதுவாக 10.07.2025 முதல் ஆகஸ்ட் 12 பிற்பகல் 5.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பத்தாரர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும்போது உரிய விவரங்களை சரிபார்த்து அதன் பின்னர் விண்ணப்பிக்க வேண்டும். அறிவிக்கை தொடர்பான கோரிக்கை மனுக்கள் trbgrievances@tngov.in என்ற மின்னஞ்சல் வாயிலாக மட்டுமே அனுப்ப வேண்டும். இதர வழியில் அனுப்பும் கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்படமாட்டாது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தேன்கனிக்கோட்டை அருகே:யானை தாக்கி விவசாயி பலி:டோலி கட்டி உடலை தூக்கி வந்தனர்

தேன்கனிக்கோட்டை, ஜூலை.11-

தேன்கனிக்கோட்டை அருகே காட்டு யானை தாக்கியதில் விவசாயி பலியானார். ஆம்புலன்ஸ் செல்ல முடியாததால் டோலி கட்டி சடலத்தை சுமார் 1 கிமீ தூரம் தூக்கி வந்து வாகனத்தில் கொண்டு சென்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை குந்துக்கோட்டை அருகேயுள்ள குடிசல்பைல் கிராமத்தை சேர்ந்தவர் ஹேமன்னா (65). இவர் பழங்குடியின வனக்குழு தலைவராக இருந்தார். விவசாயத்துடன் மாடுகளையும் வளர்த்து வந்தார். நேற்று முன்தினம் மேய்ச்சலுக்கு சென்ற ஒரு மாடு வீடு திரும்பவில்லை. அதனால் மாலையில் ஹேமன்னா மாட்டை தேடி வனப்பகுதிக்கு சென்றுள்ளார். சிறிது நேரத்தில் மாடு வீட்டுக்கு வந்து விட்டது. ஆனால் இரவு முழுவதும் ஹேமன்னா வீட்டிற்கு வராததால் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து நேற்று காலை ஹேமன்னா குடும்பத்தினர் மற்றும் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் வனப்பகுதிக்குள் சென்று அவரை தேடினர். அப்போது பனைகாப்புக்காடு மேட்டுக்கல் தடம் என்ற இடத்தில் ஹேமன்னா காட்டு யானை தாக்கி உயிரிழந்து கிடந்துள்ளார். இதுகுறித்து அப்பகுதி மக்கள் அஞ்செட்டி வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். இதனையடுத்து அஞ்செட்டி வனச்சரகர் கோவிந்தன் தலைமையில் வனவர் ராஜமாணிக்கம் வனக்காப்பாளர் சிவக்குமார் தேன்கனிக்கோட்டை டிஎஸ்பி ஆனந்தராஜ் இன்ஸ்பெக்டர் கணேஷ்குமார் எஸ்ஐ நாகராஜ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று உடலை மீட்டு விசாரணை நடத்தினர். அப்பகுதிக்கு ஆம்புலன்ஸ் வாகனம் செல்ல முடியாது என்பதால் அவரது சடலத்தை பொதுமக்கள் டோலி கட்டி ஒரு கிமீ தூரம் தூக்கி வந்தனர். பின்னர் அவரது உடல் ஆம்புலன்ஸ் மூலம் பிரேத பரிசோதனைக்காக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுகுறித்து தேன்கனிக்கோட்டை போலீசார் வழக்கு ப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த ஹேமன்னாவுக்கு நஞ்சம்மாள் என்ற மனைவியும் பசவராஜ் என்ற மகனும் வசந்தா என்ற மகளும் உள்ளனர்.

# கடும் மழை வெயில் இல்லாத சூழல்:தமிழகத்தில் வேகமெடுக்கும் கட்டுமான பணிகள்:தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிப்பு

சேலம், ஜூலை.11-

தமிழகத்தில் சாதகமான சூழ்நிலை நிலவுவதால் கட்டுமான பணிகள் 40 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் தொழிலாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைத்து வருவதாகவும் இன்ஜினியர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் கடந்த 2017ம் ஆண்டு பிப்ரவரி முதல் ஆற்றில் மணல் எடுக்க தடை விதிக்கப்பட்டது. இதன் பின்னர் தமிழகத்தில் உள்ள 90 சதவீத குவாரிகள் மூடப்பட்டன. இதன் காரணமாக மணலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு 75 சதவீத கட்டுமான பணிணீகள் நின்றது. ஆற்று மணலுக்கு மாற்றாக எம்.சாண்ட் வந்தது. கடந்த ஏழு ஆண்டாக 95 சதவீத கட்டுமான பணிக்கு எம்.சாண்ட் பயன்படுத்தப்படுகிறது. கடந்த மே மாதத்தில் எம்சாண்ட் பி சாண்ட் விலை உயர்வு மற்றும் குவாரிகள் வேலைநிறுத்தம் உள்ளிட்ட காரணங்களால் அப்போது கட்டுமான பணிகள் குறைந்தது. ஜூன் மாதத்தில் பெரும்பாலான நாட்களில் மழை பெய்தது. இதனால் கட்டுமான பணிகள் குறைந்தது. தற்போது தமிழகம் முழுவதும் சாதகமான சூழ்நிலை நிலவுவதால் கட்டுமான பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளது. இதனால் தொழிலாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைத்து வருவதாகவும் அதேவேளையில் கட்டுமான பணிக்கான பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாகவும் இன்ஜினியர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து சேலத்தை சேர்ந்த இன்ஜினியர்கள் கூறியதாவது: தமிழகம் முழுவதும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. கட்டுமான தொழிலை நம்பி 5 லட்சத்திற்கும் மேற்பட்ட இன்ஜினியர்கள் மேஸ்திரிகள் தொழிலாளர்கள் இருக்கின்றனர்.



கட்டுமான தொழிலை சார்ந்து மரம் இரும்பு சிமெண்ட் பெயிண்ட் எலக்ட்ரிக் சாமான்கள் பிவிசி பைப்புகள் உள்பட பல்வேறு பொருட்கள் விற்பனையில் பல லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். எம்.சாண்ட் விலை உயர்வு குவாரிகள் வேலை நிறுத்தம் மழை காரணமாக கடந்த இரு மாதமாக கட்டுமான பணியில் சிறு தொய்வு ஏற்பட்டது. தற்போது அதிகளவில் மழை இல்லாமலும் கடும் வெயில் இல்லாமலும் சாதகமான சூழ்நிலை நிலவுவதால் தமிழகம் முழுவதும் 40 சதவீதம் கட்டுமான பணிகள் அதிகரித்துள்ளன. கட்டுமானத்தை சார்ந்துள்ள உப தொழில்களிலும் பொருட்கள் விற்பனைகளை கட்டியுள்ளது. தமிழகத்தில் பல பகுதிகளில் செங்கல் உற்பத்தியும் கூடியுள்ளது. இத்தொழிலை சார்ந்துள்ள தொழிலாளர்களுக்கு வாரத்தில் அனைத்து வேலை நாட்களும் பணி கிடைத்து வருகிறது. குறிப்பாக பிளம்பிங் எலக்ட்ரிக்கல் டைல்ஸ் ஒட்டுவது சீலிங் அலங்கரிப்பது மண் அள்ளுவதற்கு கூடுதல் தொழிலாளர்கள் தேவைப்படுவதால் வட மாநிலங்களில் இருந்து அதிகளவில் தொழிலாளர்கள் வந்துள்ளனர். இதனால் எவ்வித தொய்வு இல்லாமல் கடந்த சில நாட்களாக கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கட்டுமான பணியை முடித்து வீட்டின் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து வருகிறோம். அதனால் வீட்டின் உரிமையாளர்கள் சந்தோஷமாக உள்ளனர். இவ்வாறு இன்ஜினியர்கள் கூறினர்.

* சிமெண்ட் கம்பி விற்பனை அதிகரிப்பு

கட்டுமான பணிகள் அதிகரிப்பால் தளவாட பொருட்களான சிமெண்ட் இரும்புக்கம்பி கருங்கல்ஜல்லி எலக்ட்ரிக்கல் பொருட்கள் பெயிண்ட் மரச்சாமான்கள் சின்டெக்ஸ் டேங்க் பிவிசி மின் ஒயர்களின் விற்பனை கூடியுள்ளது. கடந்த இரு மாதத்திற்கு முன்பு நடந்த விற்பனையை காட்டிலும் இரு வாரமாக விற்பனை 20 முதல் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. தொழில் உற்பத்தி கூடங்களில் கூடுதலாக சரக்குகள் கேட்டு இருப்பு வைத்து வருகின்றனர் என்றும் இன்ஜினியர்கள் கூறினர்.

# மருத்துவக்கல்லூரி மாணவர்களின்: குறைகளை ஆன்லைனில் பதிவு செய்யும் வசதி ஏற்படுத்த வேண்டும்:டீன்களுக்கு என்.எம்.சி. உத்தரவு

சேலம், ஜூலை.11-

தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) மருத்துவக்கல்லூரி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் இருந்து கல்வி மருத்துவ பயிற்சியின்போது எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த குறைகளை பெற்று வருகிறது. இதில் பெரும்பாலும் அதிகப்படியான கட்டணம் வசூலித்தல் உதவித்தொகை செலுத்துவதில் தாமதம் அல்லது உதவித்தொகை செலுத்தாதது ராகிங் பயிற்சி தொடர்பான பிரச்னைகள் பேராசிரியர்கள் அல்லது கல்லூரி ஊழியர்கள் தொடர்பான பிரச்னைகள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரச்னை பாடத்திட்டம் வருகை கற்பித்தல் தேர்வு மதிப்பீடு உள்ளிட்ட குறைகளை பதிவு செய்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் குறைகளை சரிசெய்ய 3 நிலைகளைக்கொண்ட குறைதீர்க்கும் மையங்களை என்.எம்.சி. ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து தேசிய மருத்துவ ஆணையத்தின் செயலாளர் ராகவ்லங்கர் அனைத்து மருத்துவக்கல்லூரி முதல்வர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: பெரும்பாலான பிரச்னைகள் கல்லூரி அல்லது பல்கலைக்கழக அளவிலேயே தீர்க்க முடியும். அவ்வாறு பிரச்னைகள் தீர்க்காத போது சம்மந்தப்பட்ட மாநிலத்தின் மருத்துவக்கல்வி ஆராய்ச்சி இயக்குநரகம் மூலம் சரிசெய்ய முடியும். பிரச்னைகள் பெரிய அளவில் இருக்கும்போது என்.எம்.சி.க்கு மேல்முறையீடு செய்யலாம். மருத்துவக்கல்லூரி நிர்வாகம் பல்கலைக்கழகம் மருத்துவக்கல்வி ஆராய்ச்சி இயக்குநரகம் என மூன்று நிலைகளில் குறைகளை தீர்க்க கட்டமைக்கப்பட்டுள்ளது. மூத்த அதிகாரிகளை கொண்டு குறைதீர்க்கும் குழுக்களை அமைக்க பரிந்துரை செய்யப்படுகிறது. கல்லூரி பல்கலைக்கழகங்கள் மருத்துவக்கல்வி ஆராய்ச்சி இயக்குநரகம் குறைதீர்க்கும் குழுக்களின் விவரங்களை இணையதளத்தில் வழங்கும். மேலும் மாணவர்கள் பெற்றோர்களிடம் இருந்து பெறப்பட்ட குறைகள் மற்றும் குறைகளுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை அனைத்தையும் தொடர்ச்சியாக பராமரிக்கும். கல்லூரி பல்கலை க்கழக நிர்வாகங்கள் இதற்காக வெப் போர்ட்டலை உருவாக்கி காட்சிப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் குறைகளை ஆன்லைன் முறையில் பதிவு செய்யக் கூடிய வசதியை ஏற்படுத்த வேண்டும். மாணவர்களின் குறைகளை விரைவாகவும் திறம்படவும் சரிசெய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். தீர்க்கப்படாத பிரச்னைகளை என்எம்சியில் மேல்முறையீடு செய்யலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.






# பாஸ்டேக் மூலமான சுங்க கட்டண வசூல் 20% அதிகரிப்பு

புதுடெல்லி, ஜூலை.11-

தேசிய நெடுஞ்சாலைகளில் பாஸ்டேக் மூலமான சுங்க கட்டண வசூல் நடப்பு நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் (ஏப்ரல் ஜூன்) 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து நேஷனல் எலக்ட்ரானிக் டோல் கலெக்சன் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம்: தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் பாஸ்டேக் மூலம் வசூலிக்கப்படும் சுங்க கட்டணம் நடப்பு 202526ம் நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் ரூ.21,000 கோடியாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய 202425ம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் வசூலான ரூ.17,280 கோடியுடன் ஒப்பிடும்போது 20 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையில் வசூலான மொத்த தொகையில் 80 சதவீதம் அதாவது ரூ.17,000 கோடி தேசிய நெடுஞ்சாலை பயன்பாட்டாளர்களிடமிருந்து பெறப்பட்டது ஆகும். இவ்வாறு புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் கூறுகையில், ‘‘கூடுதல் நெடுஞ்சாலைப் பகுதிகள் சுங்க வரியின் கீழ் கொண்டுவரப்பட்டதும், பயனர் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டதும் சுங்க கட்டண வசூல் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

தற்போதைய போக்கு நீடிக்கும்பட்சத்தில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் பிற சாலை ஒப்பந்த உரிமையாளர் நிறுவனங்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அது அரசு சமீபத்தில் அறிவித்த வருடாந்திர டோல் பாஸ் திட்டத்தை தனியார் கார் உரிமையாளர்கள் எந்த அளவுக்கு தேர்வு செய்கிறார்கள் என்பதை பொறுத்தே அமையும்.

200 சுங்கச்சாவடிகளை கடந்து செல்வதற்கான வருடாந்திர டோல் பாஸ் கட்டணம் ரூ.3,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 15 முதல் இது நடைமுறைக்கு வரவுள்ளது.



# உலக நன்மைக்காக: ராமேஸ்வரம் கோயிலில் ஜப்பான் பக்தர்கள் பூஜை

ராமேஸ்வரம், ஜூலை.11-

உலக நன்மை வேண்டி ஜப்பான் பக்தர்கள் நேற்று ராமேஸ்வரத்தில் சிறப்பு பூஜை நடத்தி ராமநாதசுவாமி கோயிலில் சிறப்பு வழிபாடு செய்தனர். ஜப்பான் தலைநகர் டோக்கியோ பகுதியை சேர்ந்த ஜப்பானிய சிவா ஆதீனம் பால கும்ப குரு முனியின் தலைமையில் அவர்களது சீடர்கள் 20 பேர் இந்தியாவில் உள்ள கோயில்களில் சிறப்பு பூஜை வழிபாடு நடத்த கடந்த 3 வாரங்களுக்கு முன்பு கிளம்பி வந்தனர். இவர்கள் முதலில் புதுச்சேரியில் உள்ள பிரத்தியங்கிரா தேவி கோயிலில் உலக நன்மைக்காக பூஜை வழிபாடு நடத்தினர். தொடர்ந்து கும்பகோணம் பழநி ஆகிய பகுதிகளில் உள்ள முக்கிய கோயில்களில் சிறப்பு வழிபாடு நடத்தினர். திருச்செந்தூர் முருகன் கோயில் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு முருகனை தரிசித்து பின் நேற்று முன்தினம் ராமேஸ்வரம் வந்தனர்.

அதிகாலையில் அக்னி தீர்த்த கடலில் புனித நீராடிவிட்டு கோயில் உள்ளே உள்ள 22 புண்ணிய தீர்த்தங்களில் நீராடினர். பின் ராமநாதசுவாமி கோயில் எதிரே தனியார் மண்டபத்தில் கோயில் ருத்ரா ஹோம பூஜை செய்தனர். அதை தொடர்ந்து கோயில் உள்ளே விஸ்வரூப ஆஞ்சநேயர் ஆத்மலிங்கம் வல்லப விநாயகர் முருகர் நந்தீஸ்வரர் ஆகிய சன்னதிகளில் வழிபட்டு பின் ராமநாதசுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வணங்கினர். பின் பர்வதவர்த்தினி அம்பாள் பள்ளி கொண்ட பெருமாள் சுவாமிகளை தரிசனம் செய்து உலகப் பிரசித்தி பெற்ற மூன்றாம் பிரகாரத்தை பார்வையிட்டனர்.

ஆன்மீக பயணம் குறித்து ஜப்பானிய சிவா ஆதீனம் பால கும்ப குரு முனியின் கூறுகையில் ‘‘இந்து கோயில்களை வழிபடுவதில் மன அமைதியும் ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதேபோல் சீடர்களுடன் இந்தியா வந்து இந்து கோயில்களில் வழிபாடு நடத்தி தரிசனம் செய்கிறோம். உலக அமைதி ஏற்பட்டு அனைவரிடத்திலும் ஆன்மிகம் வளர வேண்டும்’’ என்றார்.

# தண்டவாளத்தில் கர்ப்பிணி யானைக்கு பிரசவ வலி ஜார்க்கண்டில் 2 மணி நேரம் நிறுத்தப்பட்ட சரக்கு ரயில்

ஜார்க்கண்ட் மாநிலத்தில் தண்டவாளத்தில் படுத்திருந்த கர்ப்பிணி யானைக்கு பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து அந்த வழியாக செல்லும் சரக்கு ரயில் 2 மணி நேரத்துக்கும் மேலாக நிறுத்தப்பட்டது. பின்னர் அந்த யானை, குட்டியை ஈன்றெடுத்ததையடுத்து பாதுகாப்பாக ரயில் இயக்கப்பட்டது.

இரண்டு வாரங்களுக்கு முன்பாக, ஜார்க்கண்டில் உள்ள பர்கானா மற்றும் ஹசாரிபாக் ரயில் நிலையங்களுக்கு இடையிலான காட்டுப்பகுதியில் இருந்த தண்டவாளத்தில் படுத்திருந்த கர்ப்பிணி யானை திடீரென பிரசவ வலியால் அவதிப்பட்டது. இதனைக் கண்ட வனத் துறை அதிகாரிகள் அதிகாலை 3 மணிக்கு ரயில்வே அதிகாரிகளை தொடர்பு கொண்டு இதுகுறித்து தகவல் தெரிவித்துள்ளனர். நிலக்கரியை ஏற்றிக் கொண்டு அந்த மார்கத்தில் அடிக்கடி சரக்கு ரயில்கள் செல்வது வழக்கம். இதையடுத்து, அருகில் இருந்த ரயில் நிலையத்தை தொடர்பு கொண்ட அதிகாரிகள் புறப்பட தயாரக இருந்த ரயிலை சில மணி நேரங்கள் நிறுத்தி வைக்க உத்தரவிட்டனர். கர்ப்பிணி யானை தனது குட்டியை ஈன்றெடுத்து பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக லோகோ



பைலட்டுக்கு உடனடியாக எச்சரிக்கை செய்யப்பட்டது.

இதுகுறித்து ராம்கர் டிவிஷன் வன அதிகாரி நிதீஷ் குமார் கூறியதாவது: அதிகாலை நேரத்தில் கர்ப்பிணி யானை ஒன்று பிரசவ வலியில் தண்டவாளத்தில் படுத்திருப்பதாக அங்குள்ள வனக் காவலர் தகவல் தெரிவித்தார். சரக்கு ரயில் வரும்பட்சத்தில் தடம்புரண்டு விபத்து ஏற்படவும் வாய்ப்புள்ளதாக அவர் எச்சரித்தார்.

மேலும், அந்த மார்க்கத்தில் வரும் ரயில் அனைத்தையும் உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார். இதையடுத்து, சிறிதும் தாமதம் செய்யாமல் பர்கானாவில் உள்ள ரயில்வே கட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொண்டு அனைத்து ரயில்களையும் நிறுத்துமாறு கேட்டுக்கொண்டேன். இதையடுத்து அந்த கர்ப்பிணி யானை தண்டவாளத்திலேயே குட்டி ஒன்றை ஈன்றெடுத்து பாதுகாப்பாக காட்டுக்குள் சென்றது உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு நிதிஷ் குமார் தெரிவித்தார்.

ரயில்வே தண்டவாளத்தில் கர்ப்பிணி யானை குட்டியொன்றை ஈன்றெடுக்கும் வீடியோ வன காவலர் மற்றும் உள்ளூர்வாசிகளால் பதிவு செய்யப்பட்டது. இது, தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது. மனிதனுக்கும் யானைகளுக்கும் இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில் மனதை நெகிழ வைக்கும் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஜார்க்கண்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் யானை தாக்கி 474 பேர் இறந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதையடுத்து, யானைகள் தாக்கி மனித உயிரிழப்புகள் ஏற்படுவதில் ஒடிசாவுக்கு அடுத்த படியாக ஜார்க்கண்ட் இரண்டாவது இடத்தில் உள்ளது என்று சுற்றுச் சூழல், வனம் மற்றும் கால நிலை மாற்றத்திற்கான முன்னாள் மத்திய அமைச்சர் கிருதி வர்தன் சிங் மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று 2019 முதல் 2024 ஜூலை வரை மின்சாரம் தாக்கியது உட்பட பல்வேறு காரணங்களால் ஜார்க்கண்ட் மாநிலத்தில் 30 யானைகள் இறந்துள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.



## நாமக்கல்லில் இன்று நடந்த விழாவில் ரூ.131.36 கோடியில் திட்டப்பணிகளை உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்

நாமக்கல், ஜூலை.11-

நாமக்கல்லில் ரூ.131.36 கோடியில் திட்டப்பணிகளை தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று துவக்கி வைத்தார். தமிழ்நாடு துணை முதல்வரும், திமுக இளைஞர் அணி மாநில செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இதற்காக கரூர் மாவட்ட நிகழ்ச்சிகளை முடித்துகொண்டு அவர், நாமக்கல் வந்தார். அவருக்கு நாமக்கல் மாவட்ட எல்லையில், எழுச்சி மிகு வரவேற்பு அளித்தனர். பின்னர் அவர் நாமக்கல் சுற்றுலா மாளிகை சென்று ஓய்வு எடுத்தார். முதல் நிகழ்ச்சியாக நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் ஆய்வு கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார்.

இதில், நாமக்கல் மாவடத்தில் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து ஒவ்வொரு துறை வாரியாக ஆய்வு செய்தார். அதைத்தொடர்ந்து, மாவட்ட விளையாட்டரங்கில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் புதிய திட்டபணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 139 பணிகளுக்கு ரூ.87.38 கோடியில் அடிக்கல் நாட்டினார். மேலும், ரூ.10.80 கோடியில் முடிவடைந்துள்ள 36 திட்டப்பணிகளை திறந்து வைத்து பேசினார். பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில், 2001 பயனாளிகளுக்கு ரூ.33.18 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.


விழாவில், தமிழக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் ராஜேஸ்குமார் எம்பி, மாதேஸ்வரன் எம்பி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை கூடுதல் செயலாளர் உமா, மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி, எம்எல்ஏக்கள் ராமலிங்கம், பொன்னுசாமி, ஈஸ்வரன், மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் முன்னாள் எமஎல்ஏவுமான கே.எஸ். மூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் சுமன், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, மாநகராட்சி கமிஷனர் சிவக்குமார் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து, நாமக்கல் கால் மண்டபத்தில் திமுக சார்பு அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார்.

## ஹரியானாவில் 4.4 ரிக்டரில் நிலநடுக்கம்: டெல்லியில் கடுமையான நில அதிர்வு

புதுடெல்லி, ஜூலை.11-

ஹரியானாவின் ஜாஜ்ஜர் மாவட்டத்துக்கு அருகே இன்று காலையில் 4.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் கடுமையான நில அதிர்வு உணரப்பட்டது.

இன்று காலை 9.04 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கம் ஹரியானாவின் ஜாஜ்ஜருக்கு வடகிழக்கே 3 கிமீ தொலைவிலும், டெல்லிக்கு மேற்கே 51 கிமீ தொலைவிலும் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் 10 கிமீ ஆழத்தில் ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்கவியல்




ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹரியானாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் டெல்லி மற்றும் என்சிஆர் பகுதிகளில், இன்று காலை கடுமையான நில அதிர்வுகள் உணரப்பட்டது, இதனால் மின்விசிறிகள் மற்றும் பிற வீட்டுப் பொருட்கள் குலுங்கியதால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். நொய்டா பகுதியிலும் நில அதிர்வு உணரப்பட்டது.

ஹரியானாவில், குருகிராம், ரோஹ்தக், தாத்ரி, ஃபரிதாபாத், சோனிபட் மற்றும் பகதூர்கர் ஆகிய இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஜாஜ்ஜரில் இருந்து சுமார் 200 கி.மீ தொலைவில் மேற்கு உத்தர பிரதேசத்தில் உள்ள மீரட் மற்றும் ஷாம்லி வரை நில அதிர்வுகள் உணரப்பட்டது.

இதற்கிடையில், நிலநடுக்கம் ஏற்பட்டால், மக்கள் பீதியடைய வேண்டாம் என்றும், அந்தச் சமயத்தில் படிக்கட்டுகளைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் தேசிய பேரிடர் மீட்புப் படை ஆலோசனை வழங்கியுள்ளது.

## சென்னை தெற்கு மாவட்டம், இளைஞரணி திமுக சார்பில் கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் விழா தெருமுனை கூட்டம் நலத்திட்ட உதவிகள்

பள்ளிக்கரணை, ஜூலை.11-

சென்னை தெற்கு மாவட்டம், சோலைநல்லூர் மத்திய பகுதி இளைஞரணி சார்பில் பள்ளிக்கரணை அடுத்து சுண்ணாம்பு கொளத்தூர், மேற்கு அண்ணா நகர், 08.07.2025 நாளன்று செவ்வாய்க் கிழமை மாலை 6:00 மணிக்கு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 189 வது வட்ட கழக செயலாளர், வ. பாபு அனைவரையும் வரவேற்றார். சோழிங்கநல்லூர் மத்திய பகுதி, இளைஞரணி அமைப்பாளர் எம்.கே .பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை தமிழ்நாடு முழுவதும் பொதுக்






கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்த திமுக அரசின் சாதனைகளைப் பற்றி சிறுவர்கள் முதல் பெரியவர் வரை பல திட்டங்களை கொண்டு வந்த நான்காண்டு சாதனைகள் பற்றியும் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்று திட்டங்களை கொண்டு வந்த டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்கள் என்றென்றும் திமுக அரசின் சாதனைகளைப் பற்றி விளக்கி தலைவர்கள் சிறப்புரையற்றினார்கள். விழாவில் முன்னிலை வகித்த சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ், மாவட்ட இளைஞரணி செயலாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், ஏ.எம். வி .பிரபாகராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், ஜே, இ, பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கா, வீ, தியாகராஜன் மற்றும் விழாவில் தலைமை கழக பேச்சாளர், மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர், சைதை சாதிக், தலைமை கழக பேச்சாளர், அ.தஸ்வின் பானு டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்களின் கொண்டு வந்த திட்டங்களைப் பற்றி விளக்கி சிறப்புரையாற்றினர். விழாவில் கலந்து கொண்ட மாமன்ற உறுப்பினர்கள், தேவகுமார், முருகேசன் ,சங்கர் மற்றும் ஆரோன் ,நன்றி உரையாக 189 வட்டக் கழக இளைஞரணி அமைப்பாளர், இ.ஆர். அருண் மற்றும் திமுக கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.




## மானாமதுரை பகுதிகளில் இன்று மின்தடை

சிவகங்கை, ஜூலை.11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் துணை மின்நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஜூலை 11 மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. எனவே அன்று காலை 10 மணி முதல் மாலை 5மணி வரை மானாமதுரை,சிப்காட், ராஜகம்பீரம்,கட்டிக்குளம், மிளகனூர்,முத்தனேந்தல், தெ. புதுக்கோட்டை, கீழப்பசலை, சங்கமங்கலம், குறிச்சி, முனைவென்றி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் ஜான்சன் தெரிவித்துள்ளார்..

## சத்தீஸ்கர் மாநிலத்தில் 12 நக்சலைட்கள் சரண்

ராய்ப்பூர், ஜூலை.11-

சத்தீஸ்கரின் தண்டேவாடாவில் 2 பெண்கள் உள்ளிட்ட 12 நக்சலைட்கள், போலீஸ், சிஆர்பிஎப் அதிகாரிகள் முன்னிலையில் சரணடைந்துள்ளனர். இவர்களில் ரூ.28.50 லட்சம் வெகுமதி அறிவிக்கப்பட்ட 9 பேரும் அடங்குவர். அரசின் 'உங்கள் வீடு, கிராமத்துக்கு திரும்பு' பிரச்சாரத்தின் கீழ் மாவட்டத்தில் இதுவரை 1,005 நக்சலைட்கள் சரண் அடைந்துள்ளனர்.

இந்த சாதனை அரசின் தொலைநோக்கு கொள்கைகள், பாதுகாப்புப் படைகளின் தொடர் நடவடிக்கை மற்றும் உள்ளூர் சமூகங்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. மாவோயிஸ்ட்களின் வெற்று சித்தாந்தத்தால் வழிதவறிச் சென்ற இளைஞர்கள் மீண்டும் நல்வழிக்கு திரும்பியுள்ளனர்.

## தாம்பரம் மாநகராட்சி கீழ்கட்டளை 20 வது வார்டில் புதுப்பிக்கப்பட்ட அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்தார் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி

பல்லாவரம், ஜூலை.11-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2வது மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 40லட்சம் மதிப்பீட்டில் மூன்று புதுப்பிக்கப்பட்ட அங்கன்வாடி மையங்கள் திறக்கப்பட்டது அந்த வகையில் இரண்டாவது மண்டலத்துக்கு உட்பட்ட 20வது வார்டு கீழ்கட்டளை பகுதியில் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில், விசிக 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் சே.முத்துக்குமார் முன்னிலையில், புதுப்பிக்கப்பட்ட அங்கன்வாடி மையம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப் பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி கல்வெட்டை திறந்து வைத்து மக்கள்





பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார், பின்னர் அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர் உடன் நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் பெர்னார்ட், வட்ட செயலாளர் முருகையா மற்றும் 20வது வார்டு நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள், மாநகராட்சி அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்,



## ஜங்கால்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 58 பயனாளிகளுக்கு ரூ.64.16 இலட்சம் மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி வழங்கினார்

தேனி.ஜூலை.11-

தேனி மாவட்டம், ஜங்கால்பட்டி கிராமத்தில் அன்று (09.07.2025) நடைபெற்ற மக்கள் தொட ர்பு முகாமில் 58 பயனாளிகளுக்கு ரூ.64,16 ,100/ மதிப்பிலான அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத் பீடன், முன்னிலையில் வழங்கினார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, பொது மக்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக அரசுத்துறை அலுவலகங்களுக்கு நேரில் சென்று அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி வரும் நிலையினை மாற்றி, மாதம் ஒருமுறை மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு கிராமத்தினை தேர்ந் தெடுத்து அனைத்துத் துறை அலுவலர்களும் மக்களைத் தேடி, நேரில் சென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அதற்கு தீர்வுகாணும் வகையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு



வருகிறது.இன்றைய தினம் நடைபெற்ற முகாமில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், உட்பிரிவு பட்டா மாறுதல் 10 நபர்களுக்கும், பட்டா மாறுதல் (முழுப்புலம்) 6 நபர்களுக்கும், கூட்டுப்பட்டா 3 நபர்களுக்கும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருமண உதவித் தொகையாக ரூ.10,000/ , ஒரு நபருக்கும், இயற்கை மரணம் உதவித் தொகையாக ரூ.2,02, 500/, 9 நபர்களுக்கும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் புதிய குடும்ப அட்டை 06 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அடையாள அட்டைகள் 02 நபர்களுக்கும், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ரூ.2500/ மதிப்பிலான மருத்துவ பெட்டகம் 05 நபர்களுக்கும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் மானிய விலையில் 02 நபர்களுக்கு ரூ.1000/ மதிப்பிலான உளுந்துவிதை தொகுப்பு, தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.100 மதிப்பிலான பழக்கன்றுகள் தொகுப்பு 1 நபருக்கும், சிப்பம் கட்டும் அறை அமைப்பதற்கு மானியமாக ரூ.2,00,000/ ஒரு நபருக்கும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் தலா ரூ.5 இலட்சம் மதிப்பிலான காப்பீடு அட்டைகள் 12 நபர்களுக்கும் என மொத்தம் 58 பயனாளிகளுக்கு ரூ.64,16,100/ மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார். முன்னதாக அரசின் நலத்திட்டங்கள் குறித்து, பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை பார்வையிட்டார்.

இம்முகாமில், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) சாந்தி, இணை இயக்குநர்கள் சாந்தாமணி (வேளாண்மை), .கோயில்ராஜா (கால்நடை பராமரிப்புத்துறை), துணை இயக்குநர் (தோட்டக்கலை) நிர்மலா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .சிவபாலன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சம்பூர்ணம், வட்டாட்சியர் .சதீஸ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மைதிலி, மக்கத்தம்மாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உச்சத்தில் கொப்பரை தேங்காய் விலை கிலோ ரூ.256க்கு ஏலம்: விவசாயிகள் மகிழ்ச்சி

பழநி, ஜூலை.11-

பழநியில் கொப்பரை தேங்காய் விலை தொடர்ந்து உச்சத்தில் இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று கிலோ ரூ.256க்கு ஏலம் போனது. திண்டுக்கல் மாவட்டம், பழநி மற்றும் சுற்றுப்புற பகுதிகளான ஆயக்குடி, கணக்கன்பட்டி, மானூர், ஆண்டிபட்டி உள்ளிட்ட பகுதிகளில் தென்னந்தோப்புகள் அதிகளவில் உள்ளன. இங்கு விளைவிக்கப்படும் தேங்காய்களை, விவசாயிகள் பழநியில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொப்பரை ஏல மையத்திற்கு கொண்டு வந்து ஏலம் விடுகின்றனர். இதன்படி, நேற்று ஏராளமான விவசாயிகள் 10.50 டன் கொப்பரை தேங்காய்களை ஏலம் விடுவதற்கு கொண்டு வந்தனர்.

திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குருமூர்த்தி, பழநி சரக துணைப்பதிவாளர் செந்தில்வேல் பாண்டியன் ஆகியோர் கொப்பரை தேங்காய்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதை தொடர்ந்து நடந்த ஏலத்தில் 1 கிலோ கொப்பரை தேங்காய் ரூ.256.10க்கு ஏலம் போனது. ஒரு மாதத்திற்கு முன்பு கிலோ ரூ.120க்கு ஏலம் போன கொப்பரை தேங்காய் தற்போது ரூ.256.10க்கு ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த சில தினங்களாகவே கொப்பரை தேங்காய் விலை உச்சத்தில் உள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், ''இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்தால் விவசாயிகளுக்கு விலை குறைவாகவும், பணம் தாமதமாகவும் கிடைக்கும். கொப்பரை ஏல மையத்தில் விவசாயிகளே நேரடியாக விற்பனை செய்வதால் அதிக லாபம் கிடைப்பதுடன், உடனடியாக விவசாயிகளின் வங்கி கணக்கில் பணம் வரவு வைக்கப்படுகிறது'' என்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161